## காலை வழிபாட்டுக் கூட்ட செயல்பாடுகள்

**தமிழ் வருடம் விளம்பி, மாதம் ஆவணி 26ஆம் நாள்**

**ஆங்கில மாதம் செப்டம்பர் 11ம் நாள், 2018, செவ்வாய் கிழமை**

**இன்றைய குறள்**

**தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்**
**வானம் வழங்கா தெனின்** குறள் எண் : 18 )

**விளக்கம்**

மழை பொய்த்துப் போனால், விரிந்த இவ்வுலகத்தில் பிறர்க்குத் தரும் தானம் இராது; தன்னை உயர்த்தும் தவமும் இராது.

**பொன் மொழி**

நம்பிக்கை நிறைந்த ஒருவர் யாரிடமும் எப்போதும் மண்டியிடுவது இல்லை. டாக்டர் அப்துல்கலாம்

**இரண்டொழுக்கப் பண்பாடு**

1. என்னையும், நான் இருக்கும் இடங்களையும் எப்போதும் தூய்மையாக வைத்துக்கொள்வேன்.
2. நல்ல பழக்க வழக்கங்களை தினமும் கற்றுக் கொள்வேன்.

**பழமொழி**

A hungry man is an angry man

பசி வந்தால் பத்தும் பறந்து போகும்

**பொது அறிவு**

1. பள்ளிக்கூடத்தை முதன் முதலில் உருவாக்கியவர்கள் - ரோமானியர்கள்
2. சதுர, முக்கோண, உருண்டை வடிவங்களின் பரப்பைக் முதன் முதலில் கண்டறிந்தவர் - ஆரியபட்டர்


சௌண்டீஸ்வரி நிர்வகல்வி பள்ளி

## இன்றைய முக்கிய செய்திகள்

- அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, வரலாறு காணாத வகையில் வீழ்ச்சியை சந்தித்து வருகிறது. இதனால், பெட்ரோல், டீசல் விலை, தொடர்ந்து புதிய உச்சத்தை எட்டி வருகிறது.
- :பெட்ரோல் விலை விரைவில் ரூ.100ஐ எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. கச்சா எண்ணெய் விலை எவ்வளவு என்பதை பொறுத்தே பெட்ரோல், டீசல் விலை நிர்ணயிக்கப்படுகிறது.
- உத்தரப்பிரதேசத்தில் 'வாட்ஸ் ஆப்'பே கதி என்று கிடந்த மணமகளை திருமணம் செய்ய மணமகன் மறுத்ததால் திருமணம் நிறுத்தப்பட்டது.
- தேனி கலெக்டர், மதுரை, பெரியகுளம் போலீஸ் அதிகாரிகளுக்கு, 'வாட்ஸ் ஆப்'பில் கொலை மிரட்டல் விடுத்த ரவுடி, 'புல்லட்' நாகராஜனை, 52, பெரியகுளத்தில் நேற்று போலீசார் பிடித்தனர்.
- ஸ்டெர்லைட் ஆலையால் சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்படுகிறதா என்பது குறித்து விசாரிக்க, தேசிய பசுமைத் தீர்ப்பாயம் அமைத்துள்ள குழுவின் விசாரணைக்கு தடை கோரும் தமிழக அரசின் மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.
- உலகின் வல்லரசு நாடான அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள உலக வர்த்தக மைய இரட்டை கோபுரம் பயங்கரவாதிகளால் தகர்க்கப்பட்ட 17வது ஆண்டு நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.
- தமிழகத்தின் வட மாவட்டங்களில், அடுத்த மூன்று நாட்களுக்கு, கன மழைக்கு வாய்ப்பு உள்ளது' என, சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.
- பெட்ரோல், டீசல் விலை உயர்வை கண்டித்து போடியில் முழு அடைப்பு போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அனைத்து கடைகளும் அடைக்கப்பட்டிருந்தன.
- இங்கிலாந்து இந்திய அணி வெற்றிக்கு 446 ரன்கள் இலக்கு நிர்ணயித்துள்ளது.